சமூக அக்கறையுடன் கருத்துப் பரிமாற்றம்

வி.அருள் ஓஸ்வின்

இளையர்கள் மனதில்பட்டதை வெளிப்படையாகக் கலந்துரையாடத் தகுந்த சூழலை ஏற்படுத்துவது; மேற்கொள்ளவேண்டிய சமூகத் திட்டங்கள் பற்றிய கலந்துரையாடல்; இளையர்களின் கருத்தை அரசியல், சமூகத் தலைவர்களிடம் கொண்டுபோய்ச் சேர்ப்பது போன்ற முக்கிய நோக்கங்களுடன் சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவையின் தமிழ் இளையர் மாநாடு நடந்து முடிந்துள்ளது.

சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரவையின் 37ஆவது செயற்குழுவின் ஏற்பாட்டில் சென்ற மாதம் 23, 24 ஆம் தேதிகளில் ‘கிராஸ்ரூட்ஸ் கிளப்’பில் நடைபெற்ற இம்மாநாட்டில் 16 முதல் 25 வயதிற்கு உட்பட்ட 150 இளையர்கள், நூற்றுக்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் கலந்துகொண்டனர். மாநாட்டின் தொடக்க விழாவில் சிண்டாவின் துணைத் தலைவர் விஸ்வா சதாசிவன் சிறப்பு விருந்தினராகக் கலந்துக்கொண்டார்.

> “இளையர்களின் தலைமைத்துவம் சமூகத்தின் எதிர்காலத்திற்கு முக்கியம். ஒரு காரியத்தில் ஈடுபடுவதற்கு இரக்க உணர்ச்சி, திடமான நம்பிக்கை, சூழ்நிலையைப் புரிந்து செயல்படுதல் போன்ற பண்புகள் இன்றியமையாதவை.
>
> **சிண்டாவின் துணைத் தலைவர் விஸ்வா சதாசிவன்**

தமிழ் மொழி, சமூகத்தின் மேம்பாட்டுக்கு சமூக, மாணவ அமைப்புகள் கூட்டுறவுடன் ஒன்றுபட்டுச் செயல்பட வேண்டும் என்று தமிழ்ப் பேரவையின் சார்பில் வலியுறுத்தப்பட்டது.

தலைமைத்துவம், கல்வி, கலை மற்றும் கலாசாரம், சமூக சேவை என நான்கு பிரிவுகளில் இடம்பெற்ற கலந்துரையாடல்கள் தமிழ் இளையர்களின் சிந்தனைகளை வெளிக்கொணர்ந்தன. வல்லுநர்களிடம் பல சுவாரசியமான கேள்விகளும் எழுப்பப்பட்டன.

அரசியல் தலைவர்கள் மத்தியில் இந்தியர்களின் பிரதிநிதிப்பு குறைந்துள்ளதை இளையர்கள் சுட்டிக்காட்டினர்.

அதற்கு, நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் தங்கள் இனத்தின் பிரதிநிதி மட்டுமல்ல உலக மேடையில் நாட்டின் பிரதிநிதிகளும்கூட என்ற கருத்தை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு ரவீந்திரன் முன்வைத்தார்.

கல்விப் பிரிவில் இடம்பெற்ற கேள்வி–பதில் அங்கத்தில் உயர்நிலைக் கல்வியை முடித்த பிறகு தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்களிலும் தொடக்கக் கல்லூரிகளிலும் தமிழ் கட்டாய பாடமாகத் தொடரவேண்டும் என்று மாநாட்டில் பங்கேற்ற நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழக மாணவர் அருண் வாசுதேவ் கோரிக்கை வைத்தார்.

மாநாட்டின் இரண்டாம் நாளில் இடம்பெற்ற சிறப்புப் பேச்சாளர் அங்கம் இளையர்களை வெகுவாகக் கவர்ந்தது. நிகழ்ச்சியில் பங்கேற்ற சொல்லிசைக் கலைஞர்கள் ஆர்யன் தினேஷ் கனகரத்தினம், ஸ்ரீ பகேந்திரன் ஆகியோர் தங்களது இசைப் பயணம் பற்றிப் பேசினார்கள்.

அவர்களது உரையாடலைக் கேட்டு, “இவர்கள் இருவரும் சிறு வயதில் தமிழை முறையாகக் கற்காவிட்டாலும் தமிழ் மொழி மீது அதிக பற்றுடன் இசைத் துறையில் பல சாதனைகள் புரிந்திருக்கின்றனர் என்பது என்னைப் போன்ற இளையர்களுக்குத் தன்னம்பிக்கை தருகிறது. தமிழனாக இருப்பதில் பெருமைப்பட வைக்கிறது,” என்றார் தெமாசெக் தொடக்கக் கல்லூரியில் பயிலும் வியாசர் மாழவர், 17.

மாநாட்டில் இசைக் கலைஞர்களின் ‘ராப்’ வரிகளுக்கு வாயால் இசைபோட்டு அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தினார் வியாசர்.

ஆர்யன் தினேஷும் ஸ்ரீ பகேந்திரனும் தங்களுடைய பாடலுக்கு அவரது பங்களிப்பையும் கோரியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நிறைவு விழாவின் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட கலாசார, சமூக, இளையர் அமைச்சின் நாடாளுமன்றச் செயலாளரான திரு பே யாம் கெங், “பல இனக் கலாசாரம் கொண்ட சிங்கப்பூரில் பல சமூகங்களும் ஒன்றிணையும்போது அவற்றின் தனித்துவத்தையும் அடையாளத்தையும் இழந்துவிடக்கூடாது,” என்றார்.

மாநாட்டில் முன்வைக்கப்பட்ட அனைத்துக் கருத்துகளையும் பரிந்துரைகளையும் தமிழ்ப் பேரவை தொகுத்து வருகிறது.

மாநாட்டில் சமூக அக்கறையுடன் கூடிய தங்களது கருத்துகளை வெளிப்படையாக முன்வைத்த இளையர்கள்.

வலதுபடம்: மாநாட்டில் முன்வைக்கப்பட்ட சில பரிந்துரைகளை கலாசார, சமூக, இளையர் அமைச்சின் நாடாளுமன்றச் செயலாளரான திரு பே யாம் கெங்கிடம் அளித்தார் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரவையின் தலைவர் வி.அருள் ஓஸ்வின் (இடது). **படங்கள்: சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவை**

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.